பேலியகொட நகர சபை - 2020

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

பேலியகொட நகர சபையின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, தேறிய சொத்துக்கள்/உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் நகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் (அதிகாரம் 255) 181(1) ஆம் உப பிரிவினதும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தினதும் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் பேலியகொட நகர சபையின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இக.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நகர சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் நகர சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

**1.4 கணக்காய்வின் விடயப்பரப்பு (நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு)**

---

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி நகர சபை உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது நகர சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது நகர சபையின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க மன்றம் செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

## 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் கீழே குறிப்பிடப்படுகின்ற தேவைகள் தொடர்பாக விசேட ஏற்பாடுகள் உள்ளடங்கியுள்ளது.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ)(iii) பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம் நகர சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் நேரொத்ததாக உள்ளது.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ)(iv) பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம் முன்னைய ஆண்டின் போது என்னால் விரிவான முகாமைத்துவ அறிக்கையில் பின்வரும் இலக்கங்களின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள பரிந்துரைகள் அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை.

1.2.1(ஈ),(உ), 1.2.2, 1.2.3,1.2.4, 1.2.5, 1.2.6(ஆ), 2.2.3 மற்றுமு 3.5(அ),

## 1.6 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.6.1 உள்ளுராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

| உரிய நியமங்களுடனான தொடர்பு இணங்காமை | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) இலக்கம் 18.7 மற்றும் LGD/10A/4/ந.கி/2019 ஆம் இலக்க உள்ளுராட்சி ஆணையாளரின் 2021 பெப்ரவரி 01 ஆந் திகதிய கடிதத்தின் பிரகாரம் சபைக்குச் சொந்தமான ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள் | 2021 ஆம் ஆண்டில் சொத்துக்கள் மீள்மதிப்பீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என அறியத்தருகின்றோம். | உள்ளுராட்சி நிறுவனங்களுக் கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நடவடிக்கை எடுத்தல் |

| | | | |
|---|---|---|---|
| | மீள்மதிப்பீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | | வேண்டும். |
| (ஆ) | இலக்கம் 6.11 இன் பிரகாரம் மீளாய்வாண்டிற்காக ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களுக்கு பெறுமானத்தேய்வு செய்யப்பட்டிருக்கவில்லை. | 2021 ஆம் ஆண்டில் நிமயங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படுமென அறியத்தருகின்றோம். | - மேற்படி - |
| (இ) | இலக்கம் 9.9 இன் பிரகாரம் நிதிக்கூற்றுக்களின் குறிப்பு இலக்கம் 10 இன் கீழ் மூலதன செலவின மானிய பெறுவனவுகளில் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட கொடுப்பனவுகள், மிகையில் இனங்காணப்பட்ட மானியமாக குறைக்கப்பட்டு சேமிப்பு தேறிய சொத்துக்கள் / உரிமை மூலதனத்தின் கீழான மிகையில் இனங்காணப்படாத மானியத்தின் கீழ் குறிப்பிடப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டிற்காக வெளி நிறுவனங்களிலிருந்து கிடைத்த மற்றும் கிடைக்க வேண்டியிருந்த ரூபா 15,009,300 தொகையான மூலதன நிதி உதவி அவ்வாறு கணக்கீடு செய்யப்படாமல் பொது வைப்புக் கணக்கு ஊடாக மூலதன நிதியுதவி பெறுவனவு மற்றும் கொடுப்பனவு கணக்கிற்கு கொண்டுவரப்பட்டிருந்தது. | 2021 ஆம் ஆண்டில் நிமயங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படுமென அறியத்தருகின்றோம். | - மேற்படி - |
| (ஈ) | உள்ளூராட்சி நிறுவனங்களுக்காக இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமத்தை அடிப்படையாகக் கொண்ட விரிவான விளக்கங்களில் உள்ளடங்கிய EG 3.2 இன் கீழ் காண்பிக்கப்படுகின்ற பிரகாரம் வீதிகள் மற்றும் மதகுகள் மற்றும் ஏனைய உட்கட்டமைப்பு வசதிகளின் விடயங்கள் ஆதனங்கள், பொறி விடயங்கள், ஆதன உபகரணங்களின் கீழ் | 2021 ஆம் ஆண்டில் நிமயங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படுமென அறியத்தருகின்றோம். | - மேற்படி - |

| | | | |
|---|---|---|---|
| | கணக்கீடு செய்யப்பட வேண்டியிருந்த போதிலும் மீளாய்வாண்டில் ரூபா 16,056,292 செலவில் அபிவிருத்தி செய்யப்பட்ட வீதிகள், மதகுகள் மற்றும் வடிகாண்கள் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | | |
| (உ) | இலக்கம் 18.4 இன் படி 2020 சனவரி 01 ஆந் திகதியில் உள்ளவாறு சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களில் ஆரம்ப கூற்றொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களில் ஆரம்ப கூற்றொன்றை சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | - மேற்படி - |
| (ஊ) | இலக்கம் 3.5 இன் பிரகாரம் மீளாய்வாண்டு முதல் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்படும் போது சபையின் நிலையான சொத்துக்கள் 14 வகைகளின் கீழ் வகைப்படுத்தப்பட வேண்டிய போதிலும் சொத்துக்கள் 04 வகையின் கீழ் வகைப்படுத்தப்பட்டிருந்தது. | 2021 ஆம் ஆண்டில் சரியான சொத்துக்கள் தொகுதியின் கீழ் கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என அறியத்தருகின்றோம். | இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**1.6.2 கணக்கீட்டுக் கொள்கை**

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரண விடயங்களின் திரண்ட பெறுமானத்தேய்வு மற்றும் ஏதாவதொரு கணக்கீட்டு நட்டமொன்றை குறைத்து பௌதீக கிரயத்தில் அளவிடப்படுகின்றமை வெளிப்படுத்தப்பட்டிருந்த போதிலும் சபையின் நிலையான சொத்துக்களுக்கான பெறுமானத்தேய்வு சீராக்கங்கள் மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை. | மீள்மதிப்பீடு மேற்கொள்ளாமையின் காரணமாக பெறுமானத்தேய்வு ஒதுக்கங்களை மேற்கொள்வதற்கான இயலுமை காணப்படாதிருந்ததை அறியத்தருகின்றோம். | கணக்கீட்டு கொள்கைகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | கணனி மென்பொருட்கள் சொத்தொன்றாக நிதிக்கூற்றுக்களில் இனங்காணப்பட வேண்டியமை வெளிப்படுத்தப்பட்டிருந்த போதிலும் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | எதிர்வரும் வருடத்தில் சரியான சொத்து தொகுதியில் சேர்த்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என அறியத்தருகின்றோம். | - மேற்படி - |

**1.6.3 கணக்கீட்டுக் குறைபாடுகள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மூலதன ஈடுபடுத்தலுக்கான வருமான பங்களிப்பு கணக்கின் மீதி ரூபா 65,431,453 தொகை மற்றும் மூலதன ஈடுபடுத்தலுக்கான நிதி உதவி மூலமான பங்களிப்பு கணக்கின் மீதி ரூபா 26,891,063 ஒதுக்க நிதியத்தில் செலவு வைப்பதற்கு பதிலாக திரண்ட நிதியத்தில் செலவு வைக்கப்பட்டிருந்தது. | 2021 ஆம் ஆண்டின் இறுதிக் கணக்குகளில் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என அறியத்தருகின்றோம். | சரியாக கணக்கீடு செய்தல் வேண்டும். |
| (ஆ) | சகல மூலதன செலவின தலைப்புக்களுக்கும் வரவு வைக்கப்படாத நிலையான சொத்துக்கள்/ செய்யப்பட்ட வேலையாக கணக்கீடு செய்யப்பட வேண்டியிருந்த போதிலும் மீளாய்வாண்டில் செலவிடப்பட்டிருந்த ரூபா 3,597,865 தொகை மூலதன செலவின விடய தலைப்பில் வரவு வைக்கப்பட்டமையால் மீளாய்வாண்டின் மிகை அப்பெறுமதியால் குறைத்து காண்பிக்கப்பட்டிருந்தது. | 2021 ஆம் ஆண்டின் இறுதிக் கணக்குகளில் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என அறியத்தருகின்றோம். | சரியாக கணக்கீடு செய்தல் வேண்டும். |
| (இ) | மீளாய்வாண்டின் இறுதியில் காணப்பட்ட கணக்கின் மீதி மற்றும் பட்டோலைகளின் மீதிகளுடன் இணக்கம் செய்யப்படாத பெறுமதி ரூபா 27,873,148 ஆன 07 கணக்குகளின் நாட்குறிப்பு இலக்கம் 49 இன் மூலம் வரவிற்கும், பெறுமதி ரூபா 19,026,216 தொகையான 03 கணக்குகள் நாட்குறிப்பு இலக்கம் 50 இன் மூலமும் செலவிலும், இருப்பு மற்றும் ஒதுக்கீட்டுக் கணக்கில் பதியப்பட்டிருந்ததுடன் பதிவேடுகளின் | இணக்கம் செய்யப்படாத இருப்பு மற்றும் ஒதுக்கீட்டுக் கணக்கில் சீராக்கி பதிவேடுகளுடன் பேரேட்டு மீதியையும் சீராக்குமாறு மேலும் ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது என அறியத்தருகின்றோம். | சரியான மீதியை இனங்கண்டு சீராக்கம் செய்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | மீதி, நிதிக்கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்பட்டிருந்த பட்டோலையில் குறிப்பிடப்பட்ட மீதியைக் கவனத்தில் கொண்டு கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | | |
| (ஈ) | 2015-2020 ஆம் ஆண்டு காலப்பகுதியில் தீர்க்கப்பட்டிருந்த ரூபா 8,641,755 தொகையான 21 கடன்கொடுத்தோர் மீதிகள் மற்றும் இரத்துச் செய்யப்பட்ட 04 செயற்திட்டங்களுக்கான கடன்கொடுத்தோருக்காக ஒதுக்கப்பட்ட ரூபா 1,649,666 ஆக கூட்டுமொத்தமாக ரூபா 10,291,421 ஆக கடன்கொடுத்தோர் அதிகரித்து காண்பிக்கப்பட்டிருந்தது. | 2021 ஆம் ஆண்டின் இறுதிக் கணக்குகளில் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என அறியத்தருகின்றோம். | சரியான மீதி கணக்கீடு செய்யப்படல் வேண்டும். |
| (உ) | நேர் அனுப்புதலாக வங்கிக்கு கிடைத்த சம்பள மீளளிப்பு மற்றும் உறுப்பினர் படி மீளளிப்பு என்பன வங்கிக் கூற்றின் பிரகாரம் ரூபா 45,802,500 ஆக இருந்த போதும், மீண்டெழும் வருமான உதவியாக விரிவான வருமானக் கணக்கில் நாட்குறிப்பு 46 இல் மாற்றப்பட்டிருந்த பெறுமதி ரூபா 64,689,250 ஆனமையால் வருமான நிதியுதவியாக ரூபா 18,886,750 பெறுமதியொன்று அதிகரித்து கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | 2021 ஆம் ஆண்டின் இறுதிக் கணக்குகளில் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என அறியத்தருகின்றோம். | சரியாக கணக்கீடு செய்தல் வேண்டும். |
| (ஊ) | சபைக்குச் சொந்தமான காணி மற்றும் கட்டிடங்களின் பெறுமதி கணக்கீடு செய்யப்படாதிருந்ததுடன் காணி மற்றும் கட்டிடங்களின் கீழ் முன் அலுவலகத்தை நிர்மாணிக்கும் செலவினமான ரூபா 377,399 தொகை மாத்திரம் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | சொத்துக்கள் மீள்மதிப்பீடு செய்யப்படாமை காரணமாக மீளாய்வாண்டில் மேற்கொள்ளப்பட்ட காணி மற்றும் கட்டிட சொத்துக்கள் சேர்க்கப்பட்டு காண்பிக்கப்பட்டது என அறியத்தருகின்றோம். | மொத்த சொத்துக்களும் கணக்கீடு செய்யப்படல் வேண்டும். |

**1.6.4 கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகளின்மை**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| ரூபா 889,803 கூட்டுத்தொகையான 02 கணக்கு விடயங்களுக்குரிய கணக்காய்விற்கு தேவையான விரிவான தகவல்கள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | எதிர்வரும் வருடங்களில் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமென அறியத்தருகின்றோம். | கணக்கு மீதிகளை உறுதிப்படுத்துகின்ற தகவல்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களின் பிரகாரம் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் 2020 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மிகை ரூபா 19,210,419 ஆக இருந்ததுடன் முன்னைய ஆண்டில் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 807,413 ஆகும்.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

நகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 4 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் பொழுதுபோக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக அவதானிக்கப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது

### 3.1 விளைவற்ற செலவினங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| புதிய கணனி மென்பொருள் முறைமையொன்று 2019 பெப்ரவரி 01 ஆந் திகதி முதல் 2020 சனவரி 31 ஆந் திகதி வரையான ஒரு வருட காலத்திற்காக தனியார் கம்பனியொன்றிலிருந்து கொள்வனவு செய்வதற்கு 2019 பெப்ரவரி 01 ஆந் திகதி உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருந்தது. கம்பனியுடன் உடன்படிக்கை செய்யப்பட்ட ஒரு வருட காலத்தில் சபைக்கு ஈடுகொடுக்கின்ற வகையில் மென்பொருள் முறைமையை அபிவிருத்தி செய்து கொள்தல் தொடர்பாக கவனம் செலுத்தப்படாதிருந்ததுடன் உடன்படிக்கை காலமும் முடிவடைந்து 09 மாதங்கள் பூர்த்தியடைந்த பின்னர் 2020 நவம்பர் 03 ஆந் திகதியளவில் முறைமையில் குறைபாடுகள் காணப்படுவதாக அறிவித்து 2020 சனவரி 31 ஆந் திகதியின் பின்னர் உடன்படிக்கையை புதுப்பித்தல் பிரச்சினைக்குரியதாக இருந்ததாக அறிவிக்கப்பட்டிருந்தது. இந்தக் கணனி மென்பொருள் முறைமைக்காக ரூபா 185,000 செலவினம் செய்யப்பட்டிருக்கும் போது அது கைவிடப்பட்டு வேறொரு கணனி மென்பொருள் முறைமையை ஈடுபடுத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டமையல் மேற்கூறப்பட்ட செலவினம் பயனற்ற செலவினமாக இருந்தது. | தற்போது இதற்காக மிகவும் செயற்திறனான நெக்பா நிறுவனத்தின் மென்பொருளொன்று சபையினால் பயன்படுத்தப்படுகின்றது. | சபைக்கு நலன் பெறும் வகையில் உடன்படிக்கையில் கைச்சாத்திடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |